சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 23.09.2025

வா.சா.1 – அன்னலெட்சுமி க/பெ.சதாசிவம்

O.S. No.59/2022

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

கடன் நான் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் வீட்டுக்குடித்தனம் செய்து வந்தேன் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் மதுரை வரிச்சியூரில் பெட்டிக்கடை நடத்திவருகிறார். என் கணவருக்கு மாத வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. கடை என்பதால் மாத வருமானம் மாறுபடும். 3 லட்சம் ரூபாய் என்பது 2013ம் ஆண்டு பெரிய தொகை என்றும் அவ்வளவு பெரிய தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கோ, என் கணவருக்கோ போதிய வருமானம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுடைய தாயார் வாணி, மாடி வீடு கட்டுவதற்காக வேண்டி எங்களிடம் கடனாக பணம்கேட்டார். மேற்படி விபரத்தை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. ஒத்தக்கடை பத்திர அலுவலகத்தில் வைத்து பிரதிவாதிகளுடைய தாயார் வாணிக்கு 3 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன். மேற்படி விபரத்தை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுடைய தாயார் வாணிக்கு 3 லட்சம் ரூபாய் கடனாக கொடுக்கவும் இல்லை அதற்கு ஆதரவாக ஆவணம்

பெற்றுகொள்ளவும் இல்லை என்றும் அதனால் தான் அதை பற்றி எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ள நபர்களை விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் சாட்சியாக கையெழுத்திட்ட வாணியின் கணவர் காலமாகிவிட்டார். மற்றொரு சாட்சி இந்த வழக்கினுடைய 2வது பிரதிவாதி ஆவார். 50000ரூபாய் 2015ம் ஆண்டு என்னுடைய சகோதரர் விஜயவசந்த் என்பவர் மூலமாக கொடுத்து எனக்கு கொடுக்க சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்றும், மேற்படி 50000ரூபாய் தொகை அசல் தொகையில் வரவு வைக்கப்பட்டதா என்றால் மேற்படி 50000ரூபாயை என் சகோதரிடம் கொடுத்து கொடுக்கவேண்டிய அவசியம் நான் வரிச்சியூரில் வசித்து வந்தேன். அதனால் அவரிடம் கொடுத்துவிட்டார்கள். மேற்படி தொகையானது வட்டிக்காக கொடுக்கப்பட்ட தொகையாகும். மேற்படி தொகையானது என் சகோதரரிடம் கொடுக்கப்பட்ட காரணத்தை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 2015ம் ஆண்டு மேற்படி 50000ரூபாய் தொகையானது என் அண்ணன் மூலமாக கொடுக்கப்பட்டு வட்டியில் கழிக்கப்பட்டது என்ற விபரத்தை எனது வழக்குரையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் எடுத்துரைத்திருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ஆனால் வருடம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை. 1 – ½ வருடங்களுக்கு முன்பாக இறப்பதற்கு முன்பாக 50000ரூபாய் கொடுத்திருப்பதாக சொல்லியுள்ளேன் ஆனால் யார் இறப்பதற்கு முன்பாக குறிப்பிட்டு சொல்லவில்லை. பிரதிவாதிகளின் தாயார் வாணி எந்த வருடம் காலமானார் என்றால் 2019ம் ஆண்டு காலமானதாக அருகில் இருப்பவர்கள் தெரிவித்தார்கள். எனக்கு நேரடியாக தெரியாது. நான் 2015ம்

ஆண்டு முதல் பிரதிவாதிகளிடமும், அவரது பெற்றோர்களிடமும் கேட்டு கொண்டே தான் இருந்தோம். பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் தன்ராஜ் அவர் 2017ம் ஆண்டே காலமாகிவிட்டார். 20.12.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். அதற்கு பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை. பிரதிவாதிகளின் பெற்றோர் உயிருடன் இருந்த காலத்தில் நானும் என் அண்ணனும் சென்று கேட்ட போது வீட்டை விற்று தருவதாக கூறினார்கள் ஆனால் பணத்தை கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதி சந்தோஷ் என்பவர் சக்கிமங்கலத்தில் வசித்து வந்தார் அவருடைய தந்தை இறப்புக்கு பின்னிட்டு பிரதிவாதியின் தாயார் வாணி,1 ம் பிரதிவாதி சந்தோசுடன் சக்கிமங்கலத்தில் வசித்து வந்த காலத்தில் அங்கேயும் சென்று பணம் கேட்டோம். பணம் தருவதாக கூறி ஏமாற்றிவிட்டார்கள். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன் அதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். வா.சா.ஆ.4 ஆன ஈடுகடன்அடமான பத்திரத்தில் 50000ரூபாய் வரவு வைத்து கையெழுத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் அசலில் இல்லை, ஒளிநகலில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மேற்குறிப்பு செய்யப்பட்ட ஒளிநகல் ஈடுகடன் பத்திரமானது யாரிடம் இருக்கிறது என்று தற்போது எனக்கு தெரியவில்லை. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் தாயார் வாணி வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 1 வருடத்திற்கு முன்னர் காலமானதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சரியாக இறந்த வருடம் தெரியவில்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பு 2021 டிசம்பர் 20ம் தேதி அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தாயார் வாணி 2019ம் இறந்துவிட்டார் என்றும் ஆனால் நான் அறிவிப்பு 2021ல் தான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தாயார் எந்த

காலத்திலும் என்னிடம் 3 லட்சம் ரூபாய் கடனாக பெறவும் இல்லை அதற்கு ஆதரவாக ஈடுகடன் அடமான பத்திரத்தை எழுதி கொடுக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.09.23 19:28:07 +0530

Sub Judge

Melur